மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி

அ.வ.எண். 35/2022

பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் பி.வா.சா.1.

---

பெயர். - திரு.ஹரிச்சந்திரன்.

த/பெ. - திரு.இராமச்சந்திரன்

கிராமம் - புதுப்பட்டி

தொழில் - கூலிவேலை

தாலுகா - கயத்தார்

வயது - 53.

1872-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2026-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23-ஆம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் சத்தியப்பிரமாண வாக்குமூலம் செய்யப்பட்டு, நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை.-

1) நான் இந்த வழக்கில் பிரதிவாதியின் மகன் ஆவேன்.எனது தகப்பனாருக்காக எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 12.05.1944 ல் ஆறுமுகத்தேவர் வகையறா சுடலைமாடிக்கு எழுதிகொடுத்த பதிவுக்கிரைய ஆவணம் அசல் 2 தாள்கள் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2 | 09.05.1953 ல் சுடலைமாடி ராமன் என்ற ராயப்பனுக்கு எழுதிக்கொடுத்த பதிவு அடமான ஆவணம் அசல் 3 தாள்கள் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3 | 18.03.1957 ல் சூரனுக்கு ராமன் என்ற ராயப்பன் வலகையறா எழுதிக்கொடுத்த அடமானம் மேடோவர்ஆவணம்அசல் 2 தாள்கள் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4 | 09.05.1977 ல் சூரன் ராமச்சந்திரனுக்குஎழுதிக்கொடுத்த பதிவு கிரைய ஆவணத்தின் அசல் 7 தாள்கள் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 5 | 06.11.2025,06.11.2024 மற்றும் 08.11.2023 ஆகிய தேதிகளில் வழங்கப்பட்ட சாகுபடி நகல் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 6 | 24.03.2023 ம் தேதியில் பட்டா எண்.866 செலுத்தப்பட்ட வரி ரசீது அசல் எண்ணம்1 பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 7 | ஹரிச்சந்திரனின் ஆதாரர் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 8 | 19.01.2026 ல் பிரதிவாதியின் மருத்துவச்சான்று பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறுதேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
23.01.2026.